**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.223/2020**
**Prosecution Witness P.W. 8**

.....

Name : திரு. ரமேஷ் Calling :

Father's name : திரு. கரந்தமலை Religion :

Village : Age :

Taluk :

நாள் **- 30.01.2026**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது கருவனூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வேன் டிரைவராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. எதிரிகள் மீது போலிசார் தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு சம்பந்தமாக என்னை போலிசார் விசாரிக்கவில்லை. என்னிடம் போலிசார் கையொப்பம் வாங்கினார்கள், எதற்காக வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது, அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.6** ஆகும். என்னுடன் அத்தாட்சியில் கையொப்பம் செய்த நபர் யார் என்று எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் என்னை விசாரித்த போது, கடந்த 15.05.2018 ம் தேதி காமராஜர் சாலை, அரசமரம் பிள்ளையார்ர் கோவில் அருகே கிருஷ்ணாபுரம் 2 வது தெரு அருகில் நானும், என் நண்பர் வேல்முருகனும் பேசிக் கொண்டிருந்த போது, விளக்குத்தூண் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் எங்கள் அருகில் நின்று கொண்டிருந்த இரண்டு நபர்கள் ஓடியவர்களை பிடித்து, எங்கள் முன்னிலையில் விசாரித்ததாகவும், அப்போது அவர்கள் பெயர் மணி என்ற மணிகண்டன், லோகேஸ்வரன் என்று தெரிந்து கொண்டதாகவும், எதிரிகள் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த ஒப்புதல்வாக்குமூலத்தை

05.05.2018ம் தேதி இரவு 12.00 மணியளவில் தானும், லோகேசும், முத்துக்குமாரும் இருசக்கரவாகனத்தில் போகும் வழியில் ஒரு சரக்கு வேன் நின்று கொண்டிருந்ததாகவும், சரக்குவேனில் பொருளை ஏற்றிய போது பொருட்கள் எங்கள் மீது விழுந்துவிட்டதாகவும், அதனால் வாய்தகராறு ஏற்பட்டதாகவும், மீண்டும் மறுநாள் 1.00 மணியளவில் நாங்கள் மீண்டும் அனைவரும் ஒன்று சேர்ந்து, செந்தில்வேல் என்பவரை கடப்பாறை கம்பியால் தகாத வார்த்தைகளால் பேசி, திட்டி லோடு ஏற்ற வந்திருந்த பல வாகனங்களை வரிசையாக தாங்கள் வைத்திருந்த ஆயுதத்தால் உடைத்து கொண்டே போனதாகவும், தங்களை கூட்டிச் சென்றால் அந்த ஆயுதங்களை எடுத்து தருவதாகவும், சொன்ன வாக்குமூலத்தை நான் கையொப்பம் செய்தேன் என்றும், பின்பு எதிரிகளை அடையாளம் காட்டி இந்த வழக்கில் பயன்படுத்தப்பட்ட தடயங்ளை எங்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் கைப்பற்றியதாகவும், அதற்கான அத்தாட்சியிலும் நாங்கள் கையொப்பம் செய்ததாகவும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் என்னிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர்கள் ஆஜர்).

ஒப்பம் /-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.02.03 10:20:00 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.